முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

IDOP 150/2022

எதிர்மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி அன்பு (எ) அன்பழகி என்பவர் திரும்ப அழைக்கப்பட்டு Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திருமதி G.ரேவதி, கிரேடு -1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அன்பு ( எ) அன்பழகி | வயது | : | 32 |
| கணவர் பெயர் | : | பாலபிரதீப் | தாலுக்கா | : | கும்பகோணம் |
| கிராமம் | : | கும்பகோணம் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |

நாள் : 22-03-2025

மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை

1) நான் பி.ஈ. படித்துள்ளேன்.

2) திருமணத்திற்கு முன் நான் சென்னையில் வேலை பார்த்தேன். ரூ.25 ஆயிரம் சம்பளம் பெற்றேன். என் கணவர் B.Sc. படித்துள்ளார்.

3) என் மாமனாருக்கு வயது 65. அவர் இதய அறுவை சிகிச்சை செய்துள்ளார். என் மாமியாருக்கு 60 வயது இருக்கும் . அவரும் அம்னிசியா நோயாளி.

4) நானும் மனுதாரரும் சேர்ந்து வாழவேண்டும் என்று கேட்டு இதுவரை மனு தாக்கல் செய்யவில்லை.

5) 1.4.2019ல் என் கணவர் இங்கு வரவேண்டும் என்று கேட்டு ஒரு மனு தாக்கல் செய்தேன். என் கணவர் மூன்று மாதம் கழித்து வந்தார். அதன்பிறகு நாங்கள் சேர்ந்து வாழ முடிவு செய்ததால் அந்த மனுவை முடித்துக்கொள்ள எழுதிகொடுத்தேன். அது 22.7.2019ல் எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான்.

6) அந்த புகார் மனுவில் ரூ.4 லட்சம் எழுதிகொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) அந்தமனுவில் எனது மாமனார் கொடுமை படுத்தியதாகவோ என் கணவர் வரதட்சணை கேட்டதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

8) 3.2.2021ல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

9) 26.4.2021ல் கும்பகோணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த குற்றச்சாட்டை நான் வாபஸ் பெற்றேன் என்றால் கன்னியாகுமரியில் நான் காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுததலால அதை நான் வாபஸ் பெற்றேன்.

10) வாழ்க்கை பொருள் உதவி கேட்டு நான் தாக்கல் செய்த மனு இப்போதும் நிலுவையில்தான் உள்ளது.

11) எனது சகோதரர் 4.4.2022ல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரிலும் எனது கணவர் வரதட்சனை கேட்டதாகவோ என் மாமனார் கொடுமைபடுத்தியதாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

12) 22.9.2022ல் கன்னியாகுமரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன்என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை அன்றே பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

13) பொதுவாக அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தால் முழுமையாக விசாரணை செய்து ஒரு மாதம் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வார்கள் என்றாலும் எனக்கு காவல்துறையில் ஆள் பலம் இருப்பதால் அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. எனது சித்தி மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். அவருடைய அழுத்தத்தில்தான் இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

14) என்னுடைய கணவர் வீட்டில் என் கணவருக்கு ஆண்மை இல்லை என்று சொல்லி உள்ளேன் என்றால் அப்படி சொல்லி இருந்தால் நான் 9 வருடமாக போராடி இருக்க மாட்டேன்.

15) ம.சா.ஆ.5ல் கடைசி பாராவில் எனது கணவரின் உடல்நிலை குறித்து நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

16) 1.5.2019ல் ஒரு புகார் கொடுத்ததாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த புகார் கொடுத்ததை காட்டுவதற்கு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

17) 22.7.2019ல் ஏற்கனவே 1.4.2019ல் கொடுத்த புகாரில்தான் ஆஜராகி விளக்கம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

18) நான் கொடுத்ததாக சொல்லும் கார் என் அண்ணன் பெயரில் உள்ளது. எனது அண்ணன் அந்த காரை எனது கணவர் வீட்டில் கொண்டு வந்து விட்டுவிட்டு சென்றார் என்றாலும் வரதட்சணையாக அந்த கார் என் கணவருக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

19) 31.1.2023ல் சமூக நலதுறையில் விசாரணைக்காக ஆஜரானேன். அன்றைய தினம் எனது சகோதரர் என் அப்பா, என் அம்மா, என் அக்கா கணவர் ஆகியோர் ஆஜரானார்கள் என்றால் சரிதான்.

20) ஆய்வாளர் என்னை விசாரித்தார். என் கணவரையும் விசாரித்தார்கள். என் மீது புகார் எழுதி கொடுக்க ஆய்வாளர் என் கணவரை கட்டாய படுத்தினார் என்றால் இல்லை. என் கணவர் தான்

ஏற்கனவே 7, 8 வழக்குகள் நடப்பதால் பெருந்தன்மையாக புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

21) 7.3.2023 ல் எனது அண்ணன் மூலமாக அபுதாபியில் என் கணவருக்கு எதிராக ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

22) 3.9.2024ல் கும்பகோணம் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எம்.சி எண்.29/2024 என வாழ்க்கை பொருளுதவி கேட்டு ஒரு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

23) டி.வி.சி.7/2021ல் என்ன பரிகாரம் கேட்டிருந்தனோ அதே பரிகாரத்தை எம்.சி. எண்.29/2024லும் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

24) நான் முதல் மனுவில் என் மாமனார் கொடுமை படுத்தியதாகவோ என் கணவர் வரதட்சணை கேட்டதாகவோ சொல்லாமல் 1.5.2019ல் முதல் முதலாக நீதிமன்றத்தில் தவறான தகவல் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

25) முதலில் 4 லட்சம் என்று சொல்லி விட்டு பின்பு 6 லட்சம் என்று சொல்லி பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

26) என் கணவர் என் திருமணத்திற்கு முன்பு வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால் சென்னையில்தான் வேலை பார்த்தார். அவர் வெளிநாட்டில்தான் வேலை பார்த்தார் என்றாலும் நான் மனுவில் சொல்வதுபோல் அவருக்கு எந்த கடனும் இல்லை என்றால் சரியல்ல.

27) எனது கணவர், எனது மாமனார் மற்றும் மாமியார் அடிமைபோல் நடத்தியதாக சொல்லி உள்ளது பொய் என்றால் சரியல்ல.

28) திருமணம் முடிந்து என் கணவர் எனக்கு ஒரு போன் வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த போனை வைத்து எப்போது வேண்டுமானலும் என் கணவரிடம் பேசலாம் என்றால் சரிதான். அந்தபோன் தற்சமயம் என்னிடம் இல்லை.

29) என் கணவர் வயதானவர் என்றும் நல்ல இறை நம்பிக்கை உள்ளவர் என்றாலும் அவர் 30லட்சம் வரதட்சணை கேட்டதாக பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

30) என் அக்கா மற்றும் என் அக்காவின் கணவர் என்னுடன் இல்லை. அவர்கள் சோழபுரத்தில் உள்ளார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல.

31) எனது அக்கா அக்கா கணவரும் எங்களுடன் இருப்பதுபோல் என் கணவரையும் கும்பகோணத்தில் வந்து வசிக்குமாறு கட்டாயப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

32) 31.7.2019 அன்று சுதா சுந்தர் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக நாங்கள் சென்றோம் என்றால் சரிதான். அங்கு லூப்ரிகேசன் என்ற ஆயில் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

33) என் மீதுதான் குறை உள்ளது என்றாலும் நான் தற்சமயம் என் கணவருக்கு எதிராக ஆண்மையற்றவர் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

34) என் கணவர் வீட்டிற்கு நாங்கள் அனைவரும் பஞ்சாயத்து பேச சென்றோம் என்றால் சரிதான்.

அப்போது எங்கள் உறவினர்களும் எங்களுடன் வந்தார்கள்.

35) என் மாமனாருக்கு அந்த நேரத்தில் உடல்நிலை சரியில்லாமல் பக்கத்துஊரில் சிகிச்சையில் இருந்தார் என்றால் இல்லை. அங்கேயும் சென்று பிரச்சினை செய்தோம் என்றால் சமரசம் பேசுவதற்காகதான் சென்றோம்.

36) அங்கு வைத்து பிரச்சினை செய்ததால் அங்கு உள்ள நபர்கள் சமாதானம் செய்து அனுப்பி வைத்தார்கள் என்றால் இல்லை. அந்த நேரத்தில் உன்னையும் உன் மகனையும் கம்பி எண்ண வைக்காமல் விடமாட்டேன் என்று வர்மம் கூறி சென்றேன் என்றால் சரியல்ல.

37) நான் பொய்யாக பலமனுக்களை பல இடங்களில் போட்டு மனுதாரரை கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

38) இந்தியாவில்மட்டும் இன்றி வெளிநாட்டிலும் புகார் கொடுத்து கொடுமை படுத்தினேன்என்றால் சரியல்ல.

39) நான் வெளிநாட்டில் கொடுத்த புகாரினால் மனுதாரர் வெளிநாட்டில் பார்த்த வேலையும் பறி போய்விட்டது என்றால் சரியல்ல.

40) நாகர்கோவிலில் கொடுத்த புகாரினால் என் கணவருக்கு எதிராக லுக்அவுட் நோட்டிஸ் போலிசார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் அன்று இரவே அந்த லுக்அவுட் நோட்டிஸ் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

41) என் கணவரையும் என் மாமனாரையும் நான் என் கைகுள்ளே வைத்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில்தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

42) சேர்ந்து வாழ வேண்டுமென்ற நான் மனுதாக்கல்செய்யாததற்கு காரணமே நான் சேர்ந்து வாழக்கூடாது என்ற எண்ணத்திலும் மனுதாரரிடம் இருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்திலும் உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல

43) எதிர்உரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலங்களில் உள்ள விபரங்கள் நான்தான் சொன்னேன். அதில் நான் என் கணவருடன் 1 வாரம் மட்டும் சேர்ந்து வாழ்ந்தாக சொல்லி உள்ளேன். என் கணவரும் அந்த மனுவில் நாங்கள் இருவரும் 1 வாரம்தான் சேர்ந்து வாழ்ந்ததாக குறிப்பிட்டள்ளார் என்றால் சரிதான்.

44) என் கணவர் எனக்கு எதிராக இதுநாள் வரை எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

45) என் கணவர் வெளிநாட்டில் இருக்கும்போதும் எனக்கு வாழ்க்கை பொருளுதவி கொடுத்துவந்தார் என்றால் முதல் 3 வருடம் கொடுக்கவில்லை. பின்பு வழக்குகள் போட்டபின்பு மாதம் ரூ.7 ஆயிரம் கொடுத்து வந்தார். இந்த விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் அவர் சில மாதம் கொடுக்கிறார் சில மாதம் கொடுக்கவில்லை.

46) நான் பல்வேறு புகார்களை கொடுத்ததால்தான் மனுதாரர் மன அழுத்தினால் இனிமேலும்

என்னுடன் வாழமுடியாது என்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

47) கன்னியாகுமரி சென்று நாங்கள் பிரச்சினை செய்தபோது என் கணவரை அடித்து துன்புறுத்தினோம் என்றாலும் அதுகுறித்து போலிசார் எங்களை விசாரித்தார்கள் என்றாலும் சரியல்ல.

48) மனுதாரர் மனுவில்கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-கா.பூர்ண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்